


# இந்த வீடியோவிலே ட்ராஸ்டிரிங் பேக்




செய்யறது பத்தி தெரிஞ்சுக்கப்போறீங்க.இதை சீக்கிரமா, சுலபமா செய்திடலாம்.பொருட்களைப்போட்டு தொங்கவிட்டுக்கறதுக்கு, கன்வீனியன்ட்-ஆ, இருக்கும். இந்த பையை, , புக்ஸ்-லே இருந்து, அக்ஸஸரீஸ்- வரைக்கும் எதையும் கொண்டு போறதுக்கு பயன்படுத்தலாம்.இது, நல்ல ட்ராவலிங்க் கம்பேனியனா, இருக்கும்.

இந்த பை செய்யறதுக்கு, தேவையானது -17-க்கு, 14- அங்குலம்- அளவுள்ள துணி,12- அடி நீளமிருக்கிற கயிறு, நூல், கயிற்றை உள்ளே செலுத்தறதுக்கு, பிளாஸ்டிக் ஊசி.அப்புறம், அயர்ன்

இப்போ, நாலு ஓரங்கள்-லே இருந்து, ஆரம்பிக்கலாம்.நீளவாக்கிலே, 5-அங்குலத்துக்கு, இந்த மாதிரி மடிச்சுக்கங்க.அதை அயர்ன் - பண்ணுங்க.மறுபடியும் மடிச்சு, அயர்ன் - பண்ணுங்க. இந்த வீடியோ- லே காட்டின மாதிரி, துணியோட நாலு ஓரங்கள்-லேயும், நீளவாக்கிலே, இதே மாதிரி செய்யுங்க.

இப்போ மெஷினை செட்- பண்ணுங்க. ஸ்டிச் பேட்டர்ன் செலெக்டரை
, A -லேயும்-ஐ, ஸ்டிச் லென்த் -ஐ, 2.5. -லேயும் செட் பண்ணுங்க.

மடிச்சு அயர்ன் - பண்ணியிருக்கிற பக்கத்திலே,தைக்க ஆரம்பியுங்க.வீடியோ-லே, நீங்க பார்க்கலாம்.ஒவ்வொரு ஓரமா தைக்க ஆரம்பியுங்க.நாலு ஓரங்களையும் தைச்சு முடிச்ச பிறகு, அதிகப்படியான நூல்களை வெட்டிடுங்க.

இப்போ, அகலமான பக்கம்- வீடியோ-லே பார்க்கிற மாதிரி, முதல்லே ,அரை அங்குலத்துக்கு மடிச்சுக்கங்க, அதை அயர்ன் - பண்ணுங்க.





மறுபடியும் ஒரு அங்குலத்துக்கு மடியுங்க, அயர்ன்- பண்ணுங்க. அடுத்த பக்கத்திலேயும் இதே மாதிரி செய்யுங்க.

இப்போ, மடிச்சு இருக்கிற ஓரத்தை தையுங்க.இதெல்லாம், ஃப்ளாப்ஸ். ரெண்டு முனையிலேயும் தையல் பிரியாம இருக்கறதுக்கு ரிவர்ஸ் ஸ்டிச்- போட மறந்திடாதீங்க.

இன்னொரு பக்கத்தையும் தையுங்க.

எக்ஸ்ட்ரா த்ரெட்-ஐ, வெட்டிடுங்க. டாப் டன்னலிங்க்-ஐ, இப்போ நாம முடிச்சிட்டோம்.

அடுத்து, இந்த பிளாஸ்டிக் ஊசி உதவியாலே, டன்னல்- வழியா கயிற்றை உள்ளே நுழைச்சு இழுக்கப்போறோம்.

ஊசியிலே, கயிற்றை நுழைச்ச பிறகு அதிலே முடிச்சு போடுங்க.அதுக்கு பிறகு,இந்த மாதிரி, ஊசியை, டன்னல்- னுடைய ஒரு முனை யிலே இருந்து இன்னொரு முனைக்கு பாஸ்- பண்ணுங்க .



அதுக்கு அப்புறம், துணியினுடைய இன்னொரு முனையிலே இருக்கிற டன்னலிங்க் -வழியா கயிற்றை கொண்டு வாங்க, வீடியோ-லே, நீங்க அதை பார்க்கலாம்.

நீடிலை-ஐ எடுத்துட்டு, கயிற்றிலே முடிச்சு போடுங்க. தேவையான நீளத்துக்கு கயிற்றை எடுத்துகிட்டு, கட்- பண்ணுங்க.



இன்னொரு, நீள கயிற்றை உள்ளே நுழைக்கறதுக்கு மறுபடியும் ஊசியையும், கயிற்றையும் பயன்படுத்துங்க.இந்த முறை இன்னொரு பக்கத்திலே இருந்து ஆரம்பியுங்க.அதே மாதிரி, ரெண்டு முனைகள்-லேயும், கயிற்றை, டன்னலிங் வழியா பாஸ்-பண்ணுங்க.



முடிஞ்ச பிறகு,முனையை, வெட்டி, முடிச்சு போடுங்க.

ரெண்டு கயிறுகளும் ஒரே நீளத்திலே இருக்கற மாதிரி பார்த்துக்கணும்.இது சரியா இருக்கறதுக்கு, வீடியோ-லே, சொல்லப்பட்ற ஸ்டெப்ஸ்-ஐ, ஃபாலோ- பண்ணுங்க.

இப்போ ஒரே பக்கத்திலே இருக்கிற ரெண்டு கயிற்று முனைகளையும், மடிப்புக்கு, கீழே வையுங்க.துணிக்கு இடையிலே கயிறுகளை இந்த மாதிரி வைக்கும் போது,கயிறு அதே இடத்திலே இருக்கற மாதிரி, பின் பண்ணிடுங்க.



சைட்-லேயும், பின் பண்ணுங்க

இன்னொரு பக்கத்திலே இருக்கிற ரெண்டு கயிறுகளையும்,இதே மாதிரி செய்யுங்க.

இப்போ , பின் பண்ண ரெண்டு ஓரத்திலேயும், தையுங்க.ஆரம்பத்திலேயும் ,கடைசியிலேயும்,இறுக்கமா இருக்கறதுக்கு, ரிவர்ஸ் ஸ்டிச்- போடுங்க. தைக்கும் போது, கயிறுகள் உள்ளே இருக்கறதை உறுதிபடுத்திக்கங்க.

நீங்க தைச்சுகிட்டே வரும் போது பின்களை எடுக்க மறந்துடாதீங்க. எக்ஸ்ட்ரா- கயிறுகளையும்,நூலையும் கட் பண்ணிடுங்க.

அடுத்து, சைட்-லே ஓரங்களுக்கு மேலே சிக் சாக் தையல் போடலாம்.

பேட்டர்ன் செலக்டரை , C -லேயும், ஸ்டிச் லென்த் ஐ, 1.5.-லேயும், செட்- பண்ணுங்க.

ஓரத்திலே தையுங்க.
எக்ஸ்ட்ரா த்ரெட் -ஐ வெட்டிடுங்க. பையை வெளிப்பக்கமா திருப்புங்க. உங்க, ட்ராஸ்டிரிங்க் பேக், ரெடி

ட்ராஸ்டிரிங்க் பேக்- செய்யறது ஈஸி,யூஸ்- பண்றதுக்கும். எடுத்துகிட்டு போறதுக்கும் ஹாண்டி-ஆ இருக்கும்.ஸ்டைலிஷ்-ஆ, ஃபன்-ஆ, இருக்கும்.நீங்க எதுக்கு வேணா பயன்படுத்தலாம்.உங்களுக்கு பேக்ஸ்- பிடிக்கும்-னா,எங்களுடைய, மற்றபேக் டுடோரியலையும் நீங்க பார்க்கலாம்.

நல்லா இருக்கு, இல்லை !

